இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 15-10-2024

# அலட்சிய விபத்துகள்

கடந்த ஜூலை மாதத்தில் ‘விபத்து’ ரயில்வே - என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டி இருந்தோம். “வந்தே பாரத் விடுவது பெருமையல்ல, ‘விபத்தில்லாத’ ரயில்வேதான் பெருமை” என்று அப்போது சொல்லி இருந்தோம். அதற்கான முயற்சியை ஒன்றிய பா.ஜ.க. எடுத்திருக்கிறதா என்றால் இல்லை.

**“ரயில் விபத்துகள் வழக்கமானதுதான். தண்டவாளத்தில் மக்கள் எதையாவது வைப்பதால் விபத்து நடைபெறுகிறது. வேண்டுமென்றே விபத்து ஏற்படுத்தப்படுகிறது” என்று ஒன்றிய அமைச்சர் லாலன் சிங் பேட்டி தந்துள்ளார். இவரைப் போன்றவர்கள் ஒன்றிய அமைச்சர்கள் ஆனதுதான் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட ஜனநாயக விபத்து ஆகும்.**

சென்னைக்கு அருகே உள்ள கவரைப்பேட்டையில் பாக்மதி விரைவு ரயில் மிகப்பெரிய விபத்துக்கு உள்ளானது. மைசூரில் இருந்து தர்பங்காவுக்கு சென்று கொண்டிருந்தது பாக்மதி ரயில். இது கவரைப்பேட்டையில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. 75 கி.மீட்டர் வேகத்தில் இந்த ரயில் வந்துள்ளது. 13 பெட்டிகள் தடம் புரண்டது. 7 பெட்டிகள் ரயில் பாதையின் குறுக்கே கிடந்தன.

**“கவரைப்பேட்டையில் ரயில் நிலையம் செல்ல, விரைவு ரயிலுக்கு மெயின் லைனுக்குத்தான் சிக்னல் தரப்பட்டு இருந்தது. ஆனால் மாறாக லூப் லைனில் சென்றுள்ளது. ஏற்கனவே லூப் லைனில் சரக்கு ரயில் நின்று கொண்டிருந்ததால் சிக்னலை மீறி லூப் லைனில் சென்ற விரைவு ரயில், சரக்கு ரயில் மீது மோதி விபத்துக்கு உள்ளானது” என்று ரயில்வே தெரிவித்துள்ளது. இத்தனை தொழில் நுட்பங்கள் வளர்ந்த பிறகும் இந்த மாதிரியான விபத்துக்கள் நடப்பது மிகப்பெரிய தலைகுனிவு ஆகும்.**

இது எப்போதோ நடப்பது அல்ல. இத்தகைய விபத்துகள் நடப்பது வழக்கம் ஆகிவிட்டது. ஜூலை 18 முதல் 31 ஆம் தேதி வரை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் தொடர்ந்து விபத்துகள் நடந்தது. இதன் பிறகும் இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்கவில்லை.

2010 ஆம் ஆண்டு மே மாதம் மேற்கு வங்கத்தில் சரக்கு ரயிலும் விரைவு ரயிலும் மோதிக்கொண்ட விபத்தில் 148 பயணிகள் உயிரிழந்தனர். 2023ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் தேதி ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில், கோரமண்டல் விரைவு ரயில், பஹானாகா பஜார் நிலையம் அருகே விபத்துக்குள்ளானது. இதில் இருபதுக்கும் மேற்பட்ட பெட்டிகள் தடம் புரண்டன. இந்த விபத்தில் 296 பேர் உயிரிழந்தனர். 2023ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதி ஆந்திரப் பிரதேச மாநிலம், விஜயநகரம் மாவட்டத்தில், கொத்தவலசா சந்திப்பு ரயில் நிலையம் அருகே, விசாகப்பட்டினம் பலாசா பயணிகள் ரயில் மோதியதில், விசாகப்பட்டினம்ராயகடா பயணிகள் ரயில் தடம் புரண்டது. 14 பேர் உயிரிழந்தனர். இந்த ஆண்டு ஜூன் 17ஆம் தேதி மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள நியூ ஜல்பைகுரி அருகே சரக்கு ரயிலும், விரைவு ரயிலும் மோதிக்கொண்ட விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். இப்படிப்பட்ட விபத்துகள் தொடர் கதையாகவே இருக்கிறது.

2014 முதல் 2024 வரை சுமார் 638 ரயில் விபத்துகள் நடந்துள்ளன. சராசரியாக ஆண்டுக்கு 71 ரயில்கள் தடம் புரண்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த அக்கறையாவது அவர்களுக்கு இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. இந்த ஆண்டு கூட நிதி நிலை அறிக்கையில் 2 லட்சத்து 62 ஆயிரத்து 200 கோடி ரூபாய் ரயில்வேக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை வைத்தாவது செய்யும் முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

**“பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி ‘கவச்’ தானியங்கி பாதுகாப்பு அமைப்பை நிறுவுதல் உள்பட ரயில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குச் செலவிடப்படும்” என்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அப்போது சொன்னார். இப்போதும் சொல்கிறார். இப்படி ஒவ்வொரு விபத்து நடக்கும் போதும் சொல்வார்.**

‘கவச்’ தொழில் நுட்பமானது, ஒரே ரயில் பாதையில் இரண்டு ரயில்கள் வருவதைத் தடுக்கும். இதனை அமல்படுத்துவதற்கு இந்த ஆண்டுதான் ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்று அஸ்வினி வைஷ்ணவ் கடந்த ஜூலை மாதம் சொன்னார்.

ரயில் விபத்து குறித்து 13 ரயில்வே ஊழியர்களுக்கு சம்மன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மறுமறுபடி ஊழியர்கள் மீது பழி போட்டு தப்பிக்கப் பார்க்கிறார்கள். இந்திய ரயில்வேயில் நாடு முழுவதும் சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு, போக்குவரத்து துறை ஆகியவற்றில் கணிசமான எண்ணிக்கையிலான பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதுவும் இது போன்ற விபத்துகளுக்குக் காரணம் ஆகும்.

ஆறு நாட்களுக்கு ஒரு விபத்து என்ற விதத்தில் இரயில்வே துறை இருப்பது மிக மிக ஆபத்தானதாகும்.

நாட்டின் மிகப்பெரும் போக்குவரத்து பொதுத் துறையான ரயில்வே துறைக்கு தனி வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்து வந்த முறையை மாற்றி, பொது வரவு செலவு திட்டத்தில் சேர்த்து விட்டது பா.ஜ.க. அரசு. ரயில்வே துறையை அலட்சியப்படுத்தியதற்கு இதுதான் தொடக்கம். இதுவரை 1465 கிலோமீட்டருக்குதான் ‘கவச்’ பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த வேகத்தில் பொருத்தப்பட்டால் அனைத்து இரயில் பாதைகளிலும் கவச் பொருத்த இன்னும் எத்தனை ஆண்டுகாலம் தேவைப்படும் என்று தெரியவில்லை. **இதுதான் அலட்சியத்தின் தொடர்ச்சி. இப்போது நாம் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சிகள் அனைத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால் ஏற்படும் விபத்துகளே!**



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (13.10.2024) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வடகிழக்குப் பருவ மழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினைப் பார்வையிட்டு, மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு அறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி...!

முதல் பக்கத் தொடர்ச்சி!

மாற்றப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களில் இருந்து கூடுதல் மின்சாரத்துறை ஊழியர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். எனவே, பொதுமக்கள் பாதிப்படையாத வண்ணம் அனைத்து நடவடிக்கைகளும் அரசு தரப்பில் அலுவலர்கள், மாநகராட்சிப் பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 356 நீரேற்று நிலையங்களும் ஜெனரேட்டர்கள் மூலம் இயங்கும் வகையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஜெட்ராடிங், தூர்வாரும் இயந்திரங்கள், சூப்பர் சக்கர் உள்ளிட்ட 373 இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பணிகளில் கூடுதலாக 83 கழிவு நீரகற்றும் வாகனங்களும் பயன் படுத்தப்படவுள்ளன.

இந்த மழைநேரத்தில் தமிழ்நாடு அரசு தருகின்ற வழிகாட்டுதல்களையும் முறையாகப் பின்பற்றி, பொதுமக்களும் அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும், ஊடகவியலாளர்கள் பத்திரிகையாளர்கள், மக்களுக்கு பொறுப்புடன் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் செய்திகளை வெளியிட வேண்டும். நாம் அனைவரும் கரம் கோர்த்து,

இந்த மழைக்காலத்தில் நம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம். நன்றி வணக்கம்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.

### பருவமழையை எதிர்கொண்டு மக்களுக்கு உதவிட

# கழக நிர்வாகிகள் தயார் நிலையில் இருக்கவும்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, அக்.15 -**

**வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள கழகத் தலைவர்-முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் அரசின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோர் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் தயார் நிலையில் இருந்தாலும், பொதுமக்கள் தங்களது குறைந்தபட்சத் தேவைகளைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். ஓரிரு நாட்களுக்குத் தேவையான அளவில் அரிசி, பருப்பு, எண்ணெய், முட்டை, காய்கறிகள், குழந்தைகளுக்கான பிஸ்கட், தின்பண்டங்கள் ஆகியவற்றைக் கையிருப்பில் வைத்திருப்பதோடு, இரண்டு மூன்று நாட்களுக்குத் தேவையான துணி, மெழுகுவத்தி, தீப்பெட்டி, கொசுவத்தி, சானிட்டரி நாப்கின் உள்ளிட்ட பொருட்கள் வீட்டில் உள்ளனவா என்று கவனித்து வைத்துக் கொள்ளுங்கள். இல்லாத பொருட்களை மட்டும் அளவாக வாங்கிக் கொள்ளவும்.

குடிநீரைத் தேவையான அளவு சேமித்து வைத்துக் கொள்வதோடு, தேவையான மருந்து மாத்திரைகளையும் கையிருப்பில் வைத்துக் கொள்ளவும்.

செல்போன்கள், லேப்டாப், பவர் பேங்க் இருப்பின் அவற்றை முழுமையான சார்ஜ் செய்து வைத்துக் கொள்ளுங்கள். பதற்றப்படவோ பயப்படவோ தேவையில்லை. தேவைக்கு அதிகமாக வாங்கிக் குவிக்க வேண்டிய அவசியமுமில்லை.

பெரும்பாலான மக்கள் இத்தகைய தயார்நிலையில் இருப்பின், அரசாங்கத்தின் முழுமையான கவனத்தை இத்தகைய தயார்நிலைக்குக் கூட வாய்ப்பில்லாத ஏழை எளிய மக்களின் மீது செலுத்தலாம்; அவர்களுக்குத் தேவையான உதவிகளை உடனடியாகச் செய்து விரைவில் இயல்பு நிலைக்குக் கொண்டு வர முடியும்.

மழையை எதிர்கொள்ள அரசாங்கம் முழு அளவில் தயாராக உள்ளது. ஒரு வேளை இயற்கை வழக்கத்திற்கு மாறாகப் பெருமழைப்பொழிவை ஏற்படுத்தினாலும் சரியான முன்னெச்சரிக்கையுடன் பதற்றமில்லாமல் மழைக் காலத்தை எதிர்கொள்வோம். பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையில் அரசுடன் கழகமும் களத்தில் துணையாக நிற்க வேண்டும் என கழக உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒன்றிய, பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்களைத் தயார் நிலையில் இருக்கும்படி மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும். கவுன்சிலர்கள் தங்கள் வார்டுகளிலேயே முழுமையாக இருந்து மக்களுக்கு உதவிட வேண்டும்.

மழைக்காலத்தில் கழகத்தினர், அரசு பொதுமக்கள், தன்னார்வலர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். பொதுமக்களும் தன்னார்வலர்களும் முன்வைக்கின்ற கோரிக்கைகள், மழை தொடர்பாக தெரிவிக்கின்ற தகவல்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அது தொடர்பான மேல் நடவடிக்கைக்கு கழக நிர்வாகிகள் வழிவகை செய்யலாம். குறிப்பாக, களத்தில் தன்னார்வலர்களுடன் கை கோத்து, பொதுமக்களுக்குத் தேவையான உதவிகளை அரசிடமிருந்து பெற்றுத் தருவதற்கான தலையாயப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மழையினால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வாங்கித் தருவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைத்துக் கொள்வது அவசியம்.

குடிநீர், பால் ஆகிய இரண்டும் மிக அவசியமான தேவையாக இருக்கும். எனவே தங்கள் பகுதிகளில் அவை தடையின்றிக் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணித்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும். மீட்புப்பணிகளை மேற்கொள்ள வரும் மாநகராட்சி, மின்வாரிய ஊழியர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, பணிகள் முழு வீச்சில் நடைபெறுவதை உறுதிசெய்திட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

### மழைக் காலத்தில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி

# அத்தியாவசியப் பொருட்கள் கிடைத்திட நடவடிக்கை எடுத்திடுக!

## நெல்லை மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தல்!

நெல்லை, அக்.15–

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும்,வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்தும் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வண்ணார்பேட்டை அரசு விருந்தினர் மாளிகையில் மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மரு. என்.ஓ. சுகபுத்ரா, மாநகர காவல்துறை ஆணையர் ரூபேஸ் குமார் மீனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வு கூட்டம் நடத்தினார்.

இந்நிகழ்வில் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள், நல்ல முறையில் விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும். மேலும் வடகிழக்கு பருவமழை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு செய்யப்பட்டது.

நீர்வளத்துறையின் மூலம் அனைத்து நீர்த் தேக்கங்கள் தூர் வாரப்பட்டு சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் வடிகால்கள் அனைத்தும் மழை நீர் தங்கு தடையின்றி செல்வதற்கு முறையாக வடிகால்கள் பராமரிக்கப்பட்டு கண்காணிக்கப்படவும், மேலும் நீர் நிலைகளில் ஆகாயத் தாமரைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் தங்குதடை இன்றி கிடைக்கவும்,நியாயவிலைக் கடைகளில் தேவையான பொருட்கள் இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கு வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் மழைக்காலங்களில் நீர்நிலைகளில் பொதுமக்கள் பாதுகாப்பின்றி தேவை இல்லாமல் செல்லாமல் இருப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நெடுஞ்சாலை துறை மூலம் அனைத்து பாலங்களையும் ஆய்வு செய்து போர்க்கால அடிப்படை சீர் செய்யவும், மழைக்காலங்களில் காவல்துறை, தீயணைப்புத்துறை அனைத்து துறையினரும் தேவையான முன்னெச்சரிக்கை மீட்பு பணிகள் மேற்கொள்வதற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அம்பிகா ஜெயின், மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் விஜயலட்சுமி, உதவி இயக்குனர் பேரூராட்சிகள் வில்லியம் ஜேசுதாஸ் உள்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நூறு பேச்சாளர்களை கழகத்திற்கு உருவாக்கவேண்டும் என்ற கழக தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மண்டலம் 5க்குட்பட்ட அளவில் “என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே” என்கிற தலைப்பிலான பேச்சுப் போட்டி திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்டச் செயலாளர்கள் தளபதி முருகேசன் கோவை தெற்கு, தொண்டாமுத்தூர் ரவி கோவை வடக்கு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட 98 இளம் பேச்சாளர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் சான்றிதழ்களை வழங்கினர். இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் மு.ஜெயக்குமார், ஈ.தங்கராஜ், ராஜசேகர், சபரி கார்த்திகேயன், சக்திவேல், திருவேங்கடம், திருவாசகம், மாநகர அமைப்பாளர்கள் எம்.எஸ்.ஆர்.ராஜ், சி.முத்துக்குமார், சேந்தபுகழன், எஸ்.வி.கனகராஜ், கராத்தே பூபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.